
பக்கங்கள்: ஆறு

STAFF COPY NOT FOR SALE

22

Registered as a Newspaper

PUMP with Standard Accessories Select



NEWTONE Water Pumps

# உதயன்

விலை ரூ 2/-

தரமான உதிரிப்பாகங்களைக் கொண்டு தயாரிக்கப்படும்



நியூரோன் வாட்டர் பம்புகளை வாங்குங்கள்.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸு கார்த்திகை மீ 11 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 ற.ஆகிர் பிறை 15 (26 - 11 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 231

போக்குவரத்துச் சேவை சீர்குலைவால்

# 500 தபால் பொதிகள் யாழ்நகரில் தேக்கம்

## விமானத்தில் அனுப்பும் முயற்சி பலனளிக்கவில்லை என்று தகவல்

யாழ்ப்பாணம், நவம்பர் 26

வெளியிடங்களுக்கு அனுப்பப்படுவதற்காக ஐநூறுக்கும் அதிகமான தபால் பொதிகள் யாழ் தபாலகத்தில் மலைபோல் குவிந்து கிடக்கின்றன.

இந்தத் தபால் பொதிகளை விமானம் மூலமாக வேனும் உரிய இடங்களுக்கு அனுப்புவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி பலனளிக்கவில்லை. பொதிகளை விமானம் மூலம் எடுத்துச் செல்ல தபால் திணைக்களம் அனுமதி வழங்க மறுத்ததே இதற்குக் காரணம்.

வவுனியாவிற்கு அப்பால் உள்ள இடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் சீர் குலைந்திருப்பதன் காரணமாகவே தபால் பொதிகள் யாழ்ப்பாணத்தில் தேங்கியிருக்கின்றன.

கடந்தஇரண்டு வாரங்களுக்குமேலாக யாழ் தபாலகத்தில் இருந்து தபால் பொதிகள் அனுப்பப் படவில்லை.

இந்தப் பொதிகளை விமானத்திலாவது கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்குமாறு வட பிராந்திய தபால் அத்தியட்சகர் தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்தார் என்றும்.

எனினும் தபால்பொதிகளில் குண்டுகள் இருக்கலாம் என்ற அச்சத்தின் காரணமாகவிமானத்தில் பொதிகளைக் கொண்டு செல்ல முடியாது என்று தெரிவிக்கப்பட்டதாகவும் அறியவருகிறது.

இதே வேளை தொடர்ந்து உள்ளூரில் சேகரிக்கப்பட்டு வரும் தபால்களைக்கட்டுவதற்கும்யாழ் தபால் நிலையத்தில் தபால் பைகள் இல்லை என்று அறியவந்துள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப டிரான்ஸ் போமர்களுக்குப் பக்கத்திலை குடியிருக்கிறவை பாடு திண்டாட்டந்தான் எண்டு சொல்லுங்கோ..!

## ★ வடபகுதிக்கான மின்விநியோகம் முற்றாகத் துண்டிப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

அநுராதபுரம் மாவட்டத்தில் இடம்பெற்ற நாசவேலைகளினால் வடபகுதிக்கான மின்சார விநியோகம் கடந்த புதன்கிழமை பிற்பகல் மூன்று மணியில் இருந்து முற்றாகத் துண்டிக்கப் பட்டிருக்கிறது.

ஹபரணைக்கும் கஞத்தாவைக்கும் இடையில் உள்ள 132 கிலோ வோல்ட் மின்கோபுரம் ஒன்று நாசகாரசக்திகளினால் சேதமாக்கப்பட்டதை அடுத்தே மின் தடை ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அநுராதபுரம் மாவட்டத்திற்கு பிரதமர் பிரேமதாசா விஜயம் செய்யவிருந்த வேளையில் இந்த நாசகார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மின் கோபுரத்திற்கு ஏற்பட்ட சேத விவரம் குறித்து இன்னும் மதிப்பீடு செய்யப்படவில்லை.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னுகத்திலிருந்து மின் வழங்க முயற்சி

வடக்கிற்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டதை அடுத்து சுன்னுகத்தில் உள்ள மின்சார ஜெனரேட்டர்கள் மூலம் வடக்கின் பல இடங்களுக்கும் பகுதி பகுதியாக மின்சாரத்தை விநியோகிக்க இலங்கை மின்சாரசபை நடவடிக்கை எடுத்திருக்கிறது.

நேற்றுக் காலை 7.30 மணியில் இருந்து யாழ் மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் குறிப்பிட்ட சில மணிநேரம் மின்சாரம் வழங்கப்பட்டது.

யாழ்.போதனு வைத்தியசாலைக்கு தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

ஜெனரேட்டர் மூலம் பகுதி பகுதியாக மின்சாரம் விநியோகிக்கப்படும் பொழுது மின்சாரம் வீண் விரயமாவதைத் தடுத்து ஒத்துழைக்கும்படி இலங்கை மின்சாரசபை அதிகாரி ஒருவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ- 5)

## யாழ்-பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா இன்று

### 720 பேர் பட்டம்பெறுவர்

யாழ்ப்பாணம், நவ.26

யாழ். பல்கலைக்கழகத்தின் ஒன்பதாவது பட்டமளிப்பு விழா இன்று கைலாசபதி கலையரங்கில் நடைபெறுகிறது.

மூன்று பகுதிகளாக பட்டமளிப்புவிழா நடைபெறும். முதற்பகுதி காலை 9.30 மணிக்கும் இரண்டாம் பகுதி 11.30 மணிக்கும் மூன்றும் பகுதி பிற்பகல் 2.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

முதற்பகுதியில் 241 மாணவர்களுக்கும், இரண்டாவது பகுதியில் 223 மாணவர்களுக்கும் மூன்றுவது பகுதியில் 256 மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

இன்று வழங்கப்பட இருக்கும் பட்டங்களும் அவற்றைப் பெறுவோர்களின் எண்ணிக்கையும் வருமாறு:-

- ★ கலாநிதி - 2
- ★ முதுகலைமாணி - 9
- ★ பட்டப்பின் டிப்ளோமா - 52
- ★ கலைமாணி - 239
- ★ விஞ்ஞானமாணி - 177
- ★ எம் பி.பி.எஸ் - 67
- ★ வணிகமாணி - 69
- ★ வணிக நிர்வாக மாணி - 70
- ★ சித்தமருத்துவம்- 8
- ★ நுண்கலைப் பட்டம் - 26

கடந்த வருடம் அக்டோபரில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது மரணமடைந்த இரசாயன தொழில் நுட்பவியலாளர் திரு. முத்துசாமி அரியரட்ணத்திற்கு விஞ்ஞானமுது மாணிப் பட்டம் வழங்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

## சு. கவினரும் விலகல்!

தென் இலங்கையில் சுதந்திரக் கட்சியில் இருந்து பிரமுகர்கள் பலரும் இராஜினுமாச் செய்வதாக அறிவிக்கப் படுகிறது.

இராஜினுமாச் செய்யும்படி அனுமதேய பயமுறுத்தற் கடிதங்கள் கிடைத்ததைத் தொடர்ந்தே இவர்கள் பதவி விலகுவதாகக் கூறப்படுகிறது.

தியகொட, ஹக்மன, தெவிநுவர, மாத்தறை பகுதிகளில் பதவி விலகியவர்கள் தங்கள் இராஜினுமாக் கடிதங்களை தங்கள் வீட்டுச் சுவர்களில் ஒட்டியுள்ளனர். (உ-எ)

### சுபநேரம்

26- 11 - 1988
கார்த்திகை 11
சனிக்கிழமை

சுபநேரம்:-
03-12 முதல்04-42வரை

ராகுகாலம்:-
9-12 முதல் 10-42 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## தூர பஸ் சேவைகளை வ.பி.போ.ச.நிறுத்தியது

யாழ்ப்பாணம், நவ.26

வவுனியாவிற்கு அப்பால் உள்ள இடங்களுக்கான தூர சேவைகள் அனைத்தையும் வடபிராந்திய போக்குவரத்துச்சபை மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தி வைத்திருக்கிறது.

தென் பகுதியில் குறிப்பிட்ட சில டிப்போக்களின் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளதன் காரணமாகவும், டீசல் தட்டுப்பாடு காரணமாகவுமே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (உ-ஒ-10)

## ஜீ.சி.ஈ. பரீட்சை ஒத்திவைப்பு

கொழும்பு, நவ. 26

எதிர்வரும் டிசம்பர் மூன்றும் திகதி ஆரம்பமாக இருந்த ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் மூடப்பட்டும், தபால் சேவைகள் ஸ்தம்பித்தும் உள்ளதினுலேயே பரீட்சையை ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்று பரீட்சை ஆணையாளர் ஸ்டேர்லிங் பெரேரா தெரிவித்தார்.

இம்முறை பரீட்சை எழுத சுமார் 5லட்சத்து 70 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருந்தனர்.

மேலும் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்த 24 ஆயிரம் ஆசிரியர்கள் தேவை. தற்போதைய சூழ் நிலையில் இவர்களைக் கொழும்புக்கு அழைக்க முடியாது.

- இப்படி பரீட்சை ஆணையாளர் சொன்னுர். (உ-எ)

### புதிய முதல்வர்

கொழும்பு, நவ 26

சப்ரகமுவ மாகாண முதலமைச்சராக, மாகாண உள்ளூராட்சி அமைச்சர் ஏ.பி.எச். பிலப்பிட்டியா நியமிக்கப்பட்டார்.

திரு. புஞ்சிநிலம ராஜினுமாச் செய்ததால் முதலமைச்சர் பதவி காலியானது. (உ-எ)

## வாசகர் கவனத்துக்கு....,

★ தவிர்க்கமுடியாத எமது சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்களால் உதயன்—சஞ்சீவி பத்திரிகைகளை இம்மாதம் எட்டாம் திகதிக்குப் பின்னர் பிரசுரிக்க முடியாமற் போயிற்று என்பதை வாசகர்களுக்கு மிக வருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

★ இன்று சனிக்கிழமை சஞ்சீவி வார இதழ் வெளிவர வேண்டிய நாள் எனினும் உதயனையே வெளியிடுகின்றோம்.

★ மின்சாரச்சீர்கேடு, எரிபொருள் பற்றாக்குறை, பத்திரிகைத்தாள் தட்டுப்பாடு என்பன காரணமாக எமது பத்திரிகைகள் சில காலத்துக்குக் குறைந்த பக்கங்களுடனேயே வெளிவரும். நிலைமையை அனுசரித்து, மனம் கோணுது தங்கள்ஆதரவை தொடர்ந்து நல்கவேண்டுமென வாசக நேயர்களை அன்புடன் வேண்டுகிறோம்.

- நிர்வாகிகள்

## சுடுவதற்கு உத்தரவு

மின்சார ட்ரான்ஸ்போமர்களுக்கு அருகில் நடமாடுவோர் பாதுகாப்புப் படையினரால் மறுபேச்சின்றிச்சுடப்படுவர் என்று இலங்கை அரசு அறிவித்திருக்கிறது.

நாட்டின் பலபகுதிகளிலும் மின் விநியோகத்தைச் சீர் கெடுக்கும் விதத்தில் டிரான்ஸ்போமர்கள் பலவற்றை நாசகார சக்திகள் அழித்து வருவது தெரிந்ததே. (உ-எ)

### அதிபர்கள் பரீட்சை ஒத்திவைப்பு

இன்றும் நாளையும் நடைபெற இருந்த அதிபர்கள் பதவி உயர்வுப் பரீட்சை பின்போடப்பட்டுள்ளது.

அதிபர்கள் தரம் I, II, III, ஆகியவற்றிற்கான இப்பரீட்சைகள் நாடெங்கிலும் இன்றும் நாளையும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அவர்களுக்கான அனுமதி அட்டைகள் கூட ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தன. (ஒ-5)

## பகல்நேர மீன்பிடி; தடை நீக்கப்பட்டது

குடாநாட்டின் கடல் பிரதேசத்தில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை இம்மாதம் 5 ஆம் திகதி முதல் நீக்கப்பட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் இரவு நேரத்திலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை இயந்திரப் படகுகள் தினமும் இரவு நேரத்தில் குடாநாட்டுக் கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்கு தற்போது அனுமதிக்கப்பட்டு வருவதாக அறியவருகிறது.

வடமராட்சிப் பகுதிக்கட

(6ஆம் பக்கம் பார்க்க)

யாழ் மாவட்ட

## ஆசிரியருக்கான சம்பளம் அடுத்த சில தினங்களில்

யாழ்ப்பாணம். நவ 26

யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கான சம்பளம் அடுத்த சிலதினங்களில் வழங்கப்படவுள்ளது. இதற்கான துரித நடவடிக்கைகளை யாழ். கல்வித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தகவலை யாழ் கல்வித் திணைக்கள பிரதம கணக்காளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து சம்பள நிதிக்கான காசோலை ஒன்று ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனல் அந்தக் காசோலை இது வரை யாழ் கல்வித் திணைக்களத்தை வந்து சேரவில்லையாம்.

இதனை அடுத்து யாழ் கல்வித் திணைக்களத்திலிருந்து அதிகாரி ஒருவர் கொழும்பிற்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டார்.

முன்பு அனுப்பப்பட்ட காசோலையை ரத்துச் செய்து விட்டு புதிய காசோலை ஒன்றை அந்த அதிகாரி பெற்றுக் கொண்டு திங்களன்று இங்கு வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதே வேளையில் ஏற்கனவே அறிவித்த புதிய நடைமுறைகளின் படி இதுவரை வங்கிக் கணக்கு ஆரம்பித்த பாடசாலைகளுக்கு அந்த வங்கிக் கணக்கூடாகவும் ஏனைய பாடசாலைகளுக்கு பழைய நடைமுறைப் படியும் சம்பள விநியோகம் மேற்கொள்ளப்பட உள்ளது. (ஒ-9)

வடபகுதி அரச ஊழியர்களுக்கு

## அதிகரிக்கப்பட்ட சம்பளம் டிசம்பர் மாதத்தில்தான்

யாழ்ப்பாணம், நவ. 26

1988ஆம் ஆண்டு நவம்பரில் வழங்கப்பட இருந்த அதிகரிக்கப்பட்ட சம்பளத்தொகையின் மறுபகுதி வடபகுதி ஊழியர்களுக்கு எதிர்வரும் டிசம்பர் மாதத்திலேயே கிடைக்கும்.

1988 நவம்பர் மாதத்தில் இருந்து இந்த சம்பளத் தொகை வழங்கப்பட வேண்டும் என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திரு டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன சகல அரச அலுவலகங்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தியிருந்தார்.

எனினும் வடபகுதி அலுவலகங்களுக்கு சுற்றறிக்கை தாமதமாகக் கிடைத்ததன் காரணமாக நவம்பர் மாதம் வழங்கப்பட வேண்டிய சம்பளத்தொகைடிசம்பர் மாதமே வழங்கப்படும் என அறிய வந்துள்ளது. (உ-10)

## எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்க அதிகாரிகள் முயற்சி

வடபகுதியில் தற்பொழுது நிலவி வரும் எரிபொருள் தட்டுப்பாட்டை இன்னும் ஒரு சில தினங்களில் நீக்கி விட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தீவிரமாக முயற்சித்து வருவதாக அறியவருகிறது.

இதனை அடுத்து, அடுத்த சில தினங்களில் எரிபொருளை வடபகுதிக்கு எடுத்து வருவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகி உள்ளனவாம்.

கடந்த சில வாரங்களாக இங்கு எரிபொருள் எடுத்து வரப்படாததை அடுத்து நகரில் பெற்றோல் ஒரு லீற்றர் 50 ரூபாவுக்கும், மண்ணெண்ணை லீற்றர் 40 ரூபாவாகவும், டீசல் லீற்றர் 30 ரூபாவாகவும் விற்கப்பட்டு வந்தது.

அத்துடன் இந்த அதிகரித்த விலையிலும் எரிபொருளைப் பெற்றுக் கொள்வது மிகக் கஷ்டமாகவே இருந்து வந்தது.

ஆயினும் யாழ் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருளை விநியோகித்து வந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

தேசிய அரசை அமைக்க

## சறிமாவோவிடம் உதவி கேட்கிறர் ஜே. ஆர்.

கொழும்பு, நவ 26

நிலையானதோர் தேசிய அரசை நிறுவ உதவும்படி திருமதி பண்டாரநாயக்காவை ஜனுதிபதி திரு ஜெயவர்த்தனு கேட்டுள்ளார்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு ஜனுதிபதி ஜெயவர்த்தனு எழுதிய கடிதம் ஒன்றிலேயே இவ்வாறு கேட்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் அராஜக நிலைமை பற்றி திருமதி பண்டாரநாயக்கா அனுப்பிய இரண்டு கடிதங்களுக்குப் பதிலாக திரு.ஜெயவர்த்தனுவின் இக் கடிதம் அமைந்திருப்பதாக பி.பி.சி. நேற்றுத் தெரிவித்தது. (ஒ-எ)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அலுமாரிகள், சாப்பாட்டு மேசைகள், கொட்டில், சோக்கேஸ், Hall-Set, Office Table ஆர்மோனியம். ரேசிங் சைக்கிள், T/Writer, Rice Cooker, Three in- One, வீணை மற்றும் வீட்டிற்குத் தேவையான பொருட்கள், மலிவான விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் 112, 2ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். (7819)

6'' நீளமும் 2½ ' அகலமும் கொண்ட Deep Freezer விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- நோத் அயன் எஞ்ஜினியர். 95, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். (காளி கோயில் முன்பாக) (7939)

நல்ல நிலையில் உள்ள Honda Benly Super மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு அத்துடன் புதிய 'Kenwood', Walk man Set, பாவித்த 'Grundig' Spool tape recorder என்பனவும் விற்பனைக்கு உண்டு யோகா போட்டோ, யானைப் பந்தி-மதவடி, கொக்குவில். (7940)

முட்டையிடும் பருவத்தில் உள்ள சிவப்பு நிறக் கோழிகள். Pure அல்சேஷன் பெண் நாய் ஒரு வயது உடன் விற்பனைக்குஉண்டு. தொடர்பு 47 விதானையார் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (7941)

## நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் Printing Cards) திருமண வாழ்த்துக்கள் பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் அரஸ் ஜவுளியகம், 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C/357)

## தேவை

கடும் முயற்சியுள்ள (Van Salesman) வான் சேல்ஸ்மன் தேவை நற்சாட்சியாளர் இருவரின் பெயர்களைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும் Whitefield Industries, Valai Road, Cnankanai. (7934)

## தேவை

அனுபவமுள்ள Accounts Clerk தேவை. ஓய்வு பெற்ற வயோதிபர்களும் விண்ணப்பிக்கலாம் அயல் கிராமங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் Whitefield Industries Vallai Road, Chankanai (7935)

## WANTED

Be proud to own a LML Vespa T5 For further details contact V K Rajaratnam, 95 Stanley Road, Jaffna. (C/783)

## வீடியோ படப்பிடிப்பாளர் உடன் தேவை

வீடியோ படப்பிடிப்பில் அனுபவமான கைதேர்ந்த தொழிலாளர்கள் உடன் தேவைப்படுகின்றனர். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு கொள்ளவேண்டிய முகவர்: சாயி வீடியோ, அச்சுவேலி. (C/768)

## மணமகன் தேவை

அரசாங்க சேவையிலுள்ள யாழ்ப்பாணத்தில் கடமை புரியும் இந்து வேளாளர்குல 37 வயதுக் கன்னிப் பெண்ணுக்குப் பொருத்தமான மணமகன் தேவை தகுந்த சீதனம் வழங்கப்படும். தொடர்பு: 392 C/o உதயன் யாழ்ப்பாணம் (7929)

## தவறிவிட்டது

செல்வி கலைச்செல்வி பொன்னம்பலம் ஆகிய நான் சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பிரயாணம் செய்யும்பொழுது மினிவானில் அடையாள அட்டையைத் தவறவிட்டுள்ளேன். கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். தேசிய அடையாள அட்டை இல 64'25'297 V பல்கலைக்கழக அடையாள அட்டை இல. 84 Sid4 (7933)

## தவறிவிட்டது

பசுபதிப்பிள்ளை பன்னீர்ச்செல்வம் இல. 532521810 V, நடராசா-மலர்மகள் ஆகியோரின் அடையாள அட்டைகள் 06-11-88 அன்று நல்லை ஆதீனத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (7936)

திருமதி தங்கவேலாயுதம் ரங்கநாயகி ஆகிய எனது அடையாள அட்டை இல: 38º361239 X சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்காணும் விலாசத்திற்கு அனுப்பவும். 101, பலாலி றோட், கந்தர்மடம். யாழ்ப்பாணம். (7937)

## ரூேணியோ

தரமான ரூேணியோ பிரதிகளை (தமிழ்/ஆங்கிலம்) சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம். "ஷப்ரு" சேவைப் பிரிவு, இல 19, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (C/692)

## Motor Re winding Course

3 Months Theory. 3 Months Practical மோட்டர்கள் ட்ரான்ஸ்போமர்கள், மின்வீதிகள், மின் உபகரணங்கள் பிறர் உதவியின்றி நீங்களே வேண்டிங் செய்ய, திருத்த பயிற்சி அளிக்கப்படும் You Learn by working with actual Electrical Equipments முழுக்கட்டணம் ரூபா 650/ மாத்திரம் பயிற்சி ஆரம்பமாகி விட்டது Omega, manipay Road, Jaffna. (7938)

## மன்னாரில் போதிய மழை இல்லை

மன்னார், நவ. 26 மன்னார் மாவட்டத்தில் இம்முறை பருவமழை மிகக்குறைவாகவே பெய்துள்ளது இதனால் விவசாயிகள் பெரும்பாதிப்படைந்துள்ளனர். (ஒ ரி)

## மூக்குக் கண்ணாடிகள் (Reading Glass)

1 00 இல் இருந்து 3 00 வரையும் எல்லாத் தரத்திலும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கும்.

விலை:- 62/- இல் இருந்து சகலவிலைகளிலும்,

**பென்ஸி ஹவுஸ்,**

68, பெரிய கடை,
யாழ்ப்பாணம். (C/791)

---

+
J. M. J

## வெளிநாடுகளில் வீட்டுப்பணிப்பெண்களாகப் பணியாற்றுவதற்கு அரிய சந்தர்ப்பம்

● U. K, ● FRANCE, ● GREECE, ● SINGAPORE, ● KUWAIT, ● ABUDHABI, ● DUBAI.

முதலிய நாடுகளில் கண்ணியமான குடும்பங்களில் வீட்டுப் பணிப்பெண்ணாகப் பணிபுரிவதற்கு துரிதகதியில் ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு உடனே நேரில் வரவும்.

உங்கள் பயண அமைப்பாளர்:

# S. P. ANTON

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக)
யாழ்ப்பாணம். (C/773)

---

# London Exams

C.I.M.A. I.D.P.M.
A.A.T. I.A.B.

Computer - Basic
Hotel Management

ஆரம்பம்: 3-12-88 முதல்

ARULANDA
BERTRAM
JAYARATNAM
KAILASAPILLAI
NAVARENDRAN
PUSHA
SIVAPATHASUNDARAM
THAVARATNASINGAM
VIVEKANADARAJAH

JOIN THE LEADERS

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

(O.L.R தேவாலயத்திற்கு மேற்குப் பக்கம்)
16, 3ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். (C 449)

---

## சவூதி அரேபியாவுக்கு உடனடி வேலைவாய்ப்பு

| | சம்பளம் |
|---|---|
| 40 பேர் கனரக சாரதிகள் (H V Drivers) | 750 S. R |
| 400 பேர் கிளீனர்ஸ் | 400 S. R |

வாகனதல்லை சாரதிகளுக்கு 24 - 45வரை
கிளீனர்ஸ் வயதெல்லை 21- 45 வரை

பத்து (10) நாட்களுள் பயணம்.
கடவுச்சீட்டுடன் மூன்று கடவுச்சீட்டு சைஸ் போட்டோக்கள். உடன் தொடர்பு கொள்ளவும்

# T. V. TRAVELS & TOURIST

BROWN ROAD
(Railway Station Front)
KOKUVIL C/758)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**கணபதிப்பிள்ளை செல்வரத்தினம்**
(விதானையார்
ஓய்வு பெற்ற கிராமசேவை அலுவலகர்)

மலர்வு 27- 09- 1926 | உதிர்வு 08- 11- 1987

கற்றார் போற்றிட மற்றவர் ஏற்றிட
உற்றவர் உவந்திட உலகில் வழுந்தாய்
பெற்றவரைப் பேணி வளர்த்தெடுத்தாய்
கற்றுத் தந்தாய் பல கன்னகலைகள்
குறையும் நிறைந்த குணங்கள் நீ கொடுத்தாய்
முற்றும் பார்த்திருத்தல் முறையன்றென்று
கூற்றுவனை கணக்கினை முடிக்க வந்தான்
ஆறநெஞ்சத் துன்பத்தை அளித்தேசென்றான்
காற்றொடு கடுகி விரைந்ததையோ
கறைக்கண்டன் கலைபயிலும் திருவடிசசே

— மனைவி பிள்ளைகள்,
உறவினர்.

வளாக வீதி,
(7901)

---

# PERSONAL CLASSES

FOR

| PHYSICS | ZOOLOGY |
|---|---|
| R. சத்தியசீலன் B.Sc | R. ஈசன் B.Sc |

A/L 89 Day Classes ஆரம்பமாகிவிட்டது
A/L 89 & 90 Sat, Sun வகுப்புகள்

ஆரம்பம்: 27-11-1988
ஞாயிறு காலை 8-30

B. M. C. முன்லேன் - யாழ்ப்பாணம். (C-788)

---

# அர்ச்சுனா

கல்வி - முயற்சி - பெருவாழ்வு

## தைப்பொங்கல் பரிசுப் போட்டி

மாணவர்களிடத்து இலக்கிய உணர்வு பெருகி மாணவர் உலகம் ஆக்க இலக்கியப் பாதையில் நடைபயில வேண்டும் என்று அர்ச்சுனா விரும்புகிறான்

இந்த அடிப்படையில் 1989ஆம் ஆண்டு தைப்பொங்கல் நன்னாள் முன்னிட்டு மாணவர் பங்குபெறும் பின்வரும் போட்டிகளை நடத்த அர்ச்சுனா முன்வந்துள்ளான்.

| குறள் விளக்கச் சிறுகதை | சுயசரிதை ஆக்கம் |
|---|---|
| 1ஆம் பரிசு: ரூ. 500/- | 1ஆம் பரிசு: ரூ. 300/- |
| 2ஆம் பரிசு: ரூ. 300/- | 2ஆம் பரிசு ரூ. 200/- |
| 3ஆம் பரிசு: ரூ. 200/- | 3ஆம் பரிசு: ரூ. 100/- |

இவ்விரு போட்டிகளிலும் பரிசுகளைப் பெறும் மாணவரின் பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் சுவர்க்கடிகாரம் வழங்கப்படும்.

### குறள் விளக்கச் சிறுகதைப் போட்டி:

- ✶ 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'
- ✶ 'மகன்தந்தைக் காற்றும் உதவி யிவன் தந்தை என்நோற்றான் கொல்எனும் சொல்'
- ✶ 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றி யான்'
- ✶ 'அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய் தந்நோய்போற் போற்றாக் கடை'
- ✶ 'கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது'
- ✶ 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்'

விதிகள்:-

- ★ மேற்காணும் குறள்பாக்களில் ஏதேனும் ஒன்றை அடிப்படையாக வைத்து சிறுகதையை எழுத வேண்டும்
- ★ கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பு மாணவர்கள் இப்போட்டியில் பங்கு பெறத் தகுதி உடையவர்கள்.
- ★ சிறுகதை 4 புல்ஸ்காப் தாள் பக்கங்களுக்கு மேற்படலாகாது. தாளின் ஒருபக்கத்தில் மட்டுமே எழுதவும்.

### சுயசரிதை ஆக்கம்:

**1. குடை 2. பேனா 3. காலணி 4. நாற்காலி**

விதிகள்:

- ★ ஆண்டு 7, 8 9 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் இப்போட்டியில் பங்கு பெறலாம்.
- ★ மேற்காணும் 4 விடயங்களில் ஒன்றினைப் பற்றிய சுயசரிதையை மாணவர்கள் எழுதலாம்
- ★ ஆக்கம் இரண்டு புல்ஸ்காப் தாள் பக்கங்களுக்கு மேற்படலாகாது. தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதவும்.

பொது விதிகள்:-

- ★ ஆக்கம் மாணவர்களின் சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும் வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்தவையாக இருத்தலாகாது.
- ★ பரிசு பெறும் ஆக்கங்கள் அர்ச்சுனாவில் வெளிவரும். பதிப்புரிமை அர்ச்சுனாவுக்கு உண்டு.
- ★ மாணவனது சொந்த ஆக்கம் என்ற கல்லூரி அதிபரின் உறுதியுரை ஆக்கத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
- ★ நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

**போட்டி முடிவு திகதி: 31-12-88**

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
'அர்ச்சுனா',
அஞ்சல் பெட்டி எண்: 23,
யாழ்ப்பாணம். (C 777)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் விற்பனைக்கு

வண்ணார்பண்ணை மேற்கு ஆலடிச் சந்திச் சருகாவையில் உள்ளதும் மானிப்பாய் வீதிக்கு போக்குவரவு உரித்துடையதுமான எனது நெ. பர. 25 குளி 2 விஸ்தீரணமுடைய ஆதனத்தில் வடக்குப்பக்கமாக நிர்ணயமாகக் பட்ட நெ. பர. 9 குளி 6 10 மட்டும்தான் விற்பனைக்குண்டு.

காலை 10 - 12 இடையில் இலக்கம் 102 அரசடி வீதியில் உள்ள கடையில் தொடர்பு கொள்ளவும்.

(7967)


### தாதி தெரிவு

மட்டக்களப்பு, நவ. 26

மட்டக்களப்பில் 141 பேர் தாதிமார் பயிற்சி நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

போட்டிப் பரீட்சையில் சித்திபெற்றவர்களில் மட்டக்களப்பு-கு 71பேரும் கல்குடா, பட்டிருப்பு ஆகிய தொகுதிகளுக்குத் தலா 35பேரும் தொகுதி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தண்ணி முறிப்புக் குளத்திட்டத்தில்

# 4,000 ஏக்கர் விவசாய நிலம் தரிசாகக் கிடக்கும் அவலம்

ஒட்டுசுட்டான் நவ 26

முல்லைத்தீவு மாவட்டத்தில் தண்ணி முறிப்பு குளத்திட்டத்தின் கீழ் கடந்த 3 வருடகாலமாக 4000 ஏக்கர் நெற்காணிகள் படையினரின் நடவடிக்கையால் சாகுபடி செய்ய முடியாமல் தரிசாகக்கிடக்கின்றன.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தண்ணிமுறிப்புக் குளத்தை அண்டிய பகுதிகளை தடைசெய்யப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தியதால் அப்பகுதிக்கு எவரும் சென்று விவசாயம் செய்யமுடியாமலிருந்தது. இப்படியான நிலை தொடர்ந்து இன்றும் இருந்து வருகிறது.

இதனால் இப்பகுதியில் விவசாயத்தை மேற்கொள்ள முடியாமல் 1500 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

இதேவேளை குளத்தின் சுலுஸ் திறக்கப்பட்டு நீர் வெளியேறிக்கொண்டே இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ-113)


## யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்புவிழா - 1988

மேற்படி விழாவில் பங்குபற்றும் அனைத்து பட்டதாரி மாணவ/மாணவிகளுக்கு எமது நல்வாழ்த்துக்களும் நல்லாசிகளும்

ஞானம்ஸ் ஸ்ருடியோ
உங்களை வரவேற்கின்றது

யாழ் வளாக, கொழும்பு/பேராதனை வளாக பட்டதாரி மேல் அங்கிகள் எம்மிடம் உண்டு.

● முக்கிய குறிப்பு:

ஸ்ருடியோ இல: 1 லும் பிரத்தியேகமாக திருத்தியமைக்கப்பட்ட ஸ்ருடியோ இல: 2லும் படம் எடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

### ஞானம்ஸ் ஸ்ருடியோ

301, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C448)

---

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்
வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான

## கம்பியூட்டர் கல்வி

## COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

ஆரம்பம்: 5. 12. 88 பயிற்சிக்காலம்: 1 1/2 மாதம்
கட்டணம்: 950/- (இருபிரிவுகளாகச் செலுத்தலாம்)

## COMPUTER PROGRAMMING IN dBASE III

ஆரம்பம்: 6. 12. 88 பயிற்சிக்காலம்: 2 மாதம்
கட்டணம்: 1250/- (பகுதி பகுதியாகச் செலுத்தலாம்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி குளிரூட்டப்பட்ட அறையில் I B. M (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு நாள்: 3. 12. 88

## UNIKCO COMPUTER CENTRE

No: 5, POWER HOUSE Rd,
2 nd LANE, JAFFNA.
(Near Sub - Post Office) (C/779)

---

உஷா

## உன்னதமான தையலுக்கு



ஊஷா டொமெஸ்டிக் டிலியூக்ஸ்

- பீட்ட்ரொப் பொறிமுறை
- முன் பின் தையல்
- முகப்பு அலங்காரத் தையல்

ரூபா 3,850/-

பெரிய சக்கரம் கொண்ட டெயிலர் மொடல்
ரூபா 4,000/-

சகல பாகங்களும் உலோகத்தினால் செய்யப்பட்டு பிளேட் செய்யப்பட்டுள்ளது. ஒரு வருட உத்தரவாதம்
தவணை முறையில் பணம் செலுத்தலாம்.

உதிரிப் பாகங்கள் தாராளமாகக் கிடைக்கும் நாடு முழுவதிலும் விற்பனையாளர்கள் உண்டு.

உஷா

ஊஷா இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்,
7934, 7831.

---

## கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
## ஆண்டு - 6
## பிரவேசப் பரீட்சை - 1988

விண்ணப்ப முடிவுத் திகதி:- 4-12-88
பரீட்சைத் திகதி:- 11-12-88
ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9.00

பரீட்சைக்குரிய பாடங்கள்:
தமிழ் - கணிதம்

விண்ணப்பப் படிவங்களை ரூபா 5/= செலுத்தி எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பூ. க. இராசரத்தினம்
அதிபர்
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

(C/775)

---

J M J




CANADA

# கனடா

1988 நவம்பர் இறுதியில் கனடா நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெற்றுள்ளது.
இது அனைவர்க்கும் தெரிந்த செய்திதான்! இதன் பின்...?

எனவே,... நீங்கள் கனடா பயணம் மேற்கொள்வதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்...!
இறைவன் அருளைத் துணைகொண்டு... எமது அன்பாகள

★ வாரம் மூன்று குழுக்களாகப் பயணம் மேற்கொள்கின்றார்கள்...! ★

● மற்றுமொரு நற்செய்தி,..!

தமிழ் நாட்டிலிருந்தும் நாம் தேர்ந்தெடுத்த அன்பர்கள் எமது கனடாப் பயணக் குழுக்களில் இணைந்து பயணம் மேற்கொண்டு வருகிறார்கள்...!

## இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறாதீர்கள்...!

கடந்தவாரம் இணுவிலைச் சேர்ந்த அன்பர் திரு. மகேஸ்வரன் என்பவர் கனடாவிற்கு போய்ச் சேர்ந்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்!

★ மற்றும் சகல விபரங்களுக்கும்.. உடனே... நேரில் தொடர்பு கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறேன்...!! ★

உங்கள் பயண அமைப்பாளர்,

## எஸ். பி. அன்ரன்

No: 648 1/3 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C-770)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




+
J M J.

## வேலை வாய்ப்பு ஒழுங்குகள்

### சவூதி அரேபியா

சவூதி அரேபியா அரசுக்குச் சொந்தமான பாரிய மீன்பிடிக் சப்பல்களில் பணிபுரிவதற்குக் கீழ்க்காணும் பதவிவெற்றிடங்கள் உடனடியாக உள்ளன.

| | சம்பளம் | |
|---|---|---|
| Captan / Master - | 1500 S R | 12 000/- ரூபா |
| III rd Engineer | 1200 S R | 10.000/- ரூபா |
| மீன்பிடித் தொழிலாளர்கள் | 900 S.R | 7, 200/- ரூபா |

உணவு இருப்பிட வசதிகள் இலவசம்

விரும்பும் சட்டத்தொழிலில் போதிய அனுபவம் உடையவர்கள் மட்டும் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

### Saudi Visa

1. Mr. Marian Vincent Sutharasingh
   கரையூர் - H 0376706
2. Mr. Sebamalai Mariyan Thevathasan
   ஊர்காவற்றுறை - J 0260845
3. Mr. Emmanuel Francis Justin
   ஊர்காவற்றுறை - H 0306598
4. Mr. Manuel Dadycilus Alias Douglus Selvakumar
   - H 0292 92

மேலே குறிப்பிட்ட பெயர் உடையவர்களுக்கான பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

விசா மற்றும் ஒழுங்குகள் மிகத் துரிதமாகச் செய்து தரப்படும்,
மேலதிக விபரங்களுக்கு உடனே நேரில் வருக.

உங்கள் பயண அமைப்பாளர்

## எஸ். பி. அன்ரன்

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

(C/-72

## Jaffna English Academy

(A LUX IN TENEBRIS)

✱ NCE (Elementary Examination.
**LONDON CERTIFICATE**

London Examination held at Jaffna English Academy
The local Examination Centre for Pitmans.

Assessment of Answerscripts and
Award of Certificates from Pitmans-London.

ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்றுப் பலமை பெறவும் London Certificates பெறவும் அரியதொரு சந்தர்ப்பம்.

விரிவுரைகள்: சனி, ஞாயிறு கிழமைகளில்
10-30 a.m. to 12-30 p.m.
காலம்: 3 மாதங்கள்
முழுக்கட்டணம்: ரூபா 350/- மட்டும்
தொடக்கம்: 4-12-88

✱ TOEFL:

More past papers will be done. Intensive Coaching to help students to achieve success.

விரிவுரைகள்: சனி, ஞாயிறு கிழமைகளில்
8-30 a.m. to 10-30 a.m.
காலம்: 3 மாதங்கள்
முழுக்கட்டணம்: ரூபா 300/- மட்டும்.
தொடக்கம்: 4-12-88
விரிவுரைகள்: கந்தையா நவரேந்திரன்

(C-769)

### சிரமதானம்

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான கட்டட வேலைகளில் ஏறக்குறைய 25 கியூப் அத்திவாரப் பகுதியை அராலி கிழக்கு ஐயனார் சங்க உறுப்பினர்களில் 200 பேர் சிரமதான முறையில் பூர்த்தி செய்துள்ளனர்.

## நிலுவையாக இருந்த இறப்பு - திருமண அத்தாட்சிப் பத்திரம் வழங்கும் வேலை பூர்த்தி

யாழ்ப்பாணம், நவ 25

நிலுவையாக இருந்த இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் 1954 ஆம் ஆண்டுக்கு முன் பிறந்தவர்களின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் முழுமையாக வழங்கப்பட்டு விட்டன.

யாழ் பிரதேச பிரதம பதிவாளர் திரு. எஸ். இராசையா இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ் செயலகத்தில் பல ஆயிரக்கணக்கான இறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் கடந்த மாதங்களில் தேங்கிக்கிடந்தன.

யாழ் செயலக பிறப்பு இறப்புப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட விரைவான நடவடிக்கைகளினால் இவை தற்பொழுது வழங்கி முடிக்கப்பட்டுள்ளன.

1954 ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்தவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் பற்றாக் குறையினாலேயே இவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் தாமதமாவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-5)

## ஓராண்டு நினைவஞ்சலி



### சத்தியசீலன் ஜெயசீலன்

| அன்னை மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 10 - 06 - 1971 | 21 - 10 - 1987 |

என் அன்பின் ஒளிவிளக்கே, கருவில் உருவாகி வந்து வயதளவிலே வளர்ந்து கதைகள் பல சொல்லி மகிழ்வித்தாயே! என் அன்புச் செல்வமே! கள்ளம் கபடமற்ற உன் உடம்பிலிருந்த உயிரை பகைவரின் அட்டகாசத்தால் காலதேவன் பிரித்தானே! என் மகனே உனது பிரிவை மறக்க முடியாமல் காலம் எல்லாம் கண்ணீர் விடுகிறோமே. உமது ஆத்மா சாந்திஅடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உமது அப்பா, அம்மா, தம்பி.

ஐ. சத்தியசீலன்,
(செட்டி வீதி)
இணுவில் மேற்கு.

(7896)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



### திரு. பொன்னுச்சாமி சிவலோகநாதன் (B Sc. Eng)

விரிவுரையாளர், பொறியியல் பீடத்தலைவர்,
யாழ். தொழில் நுட்பக்கல்லூரி

அழிப்பு: 10 - 11 - 1987

அப்பா! எங்கள் அன்புத் தெய்வமே! அன்பால் பண்பால் மட்டுமன்றி, அறிவு, ஆற்றல், ஆளுமை யாவற்றாலும் யாவரையும் ஆட்கொண்ட தெய்வமே. அன்று கடவுள் நம்பிக்கை உண்டு உங்களைக் காப்பது என் கடன் எனக் கைத்தலம் தந்து சில கணப்பொழுதில் வந்து ரவை உமது உடலில் பாய்ந்ததும் நிலை தளர்ந்து நீரும் பிள்ளைகளும் நனிவலாமல் என்ன செய்வீர்கள் எனக்கேட்டுத்தவிக்கும் வேளைதனில், அப்பா கடவுளைக் கும்பிடுங்கள் நீங்கள் வாழவேண்டும் என வேண்ட உங்கள் குல தெய்வத்தை வேண்டி வணங்கிடும் வேளை தனில் மீளாத் துயில் கொண்டீர் பூதவுடல் மறைந்து ஓராண்டெனினும் ஓராயிரமாண்டெனினும் நாம் உள்ளவரை தங்களின் பசுமை நினைவுகளுடன், தாங்கள் எமக்கென வகுத்த வழி செல்வோம்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி எமது கண்ணீர் அஞ்சலி.

தங்கள் நினைவில் வாடும்
அன்பு மனைவி, மக்கள் வசீகரன்
மயூரன், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

கல்லூரி ஒழுங்கை,
கோப்பாய்.

(7826)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி இரத்தினமணி அப்புத்துரை

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 01 - 04 - 1913 | 26 - 10 - 1988 |

அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் எம்மை எல்லாம் ஆதரித்து வழிநடத்தி வந்த வேளை ஓசை இன்றிப் பிரிந்துவிட்ட எம் இல்ல ஜோதியே! மம்மி உங்கள் ஆத்மா சாந்தியடைய நித்தம் பிரார்த்திக்கும்.

அன்புப் பிள்ளைகள்,
அன்பு மருமகள்,
அருமைப் பேத்தி,

வண்டியர் வளவு,
உடுவில் கிழக்கு.

(7827)

## PATRICIAN INSTITUTES
## தொழில் நுட்ப பயிற்சி நெறிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**1. Computer Programming**
(Data Processing And Basic Language) — 6 மாதம்

Lectures by:
**Mr. Sundrarajah** B Sc. (Eng) Hons (U K), M. C. S.
and
**Mr. K. Vimalrajah**

Lectures in A/C Room
Practicals on Laser XT, AT, 286, 386, (I.B.M Compatables) Commodore, and Apple II Computers)

தொழில் புரிவோரின் நலன் கருதி புதிய பிரிவு தற்போது ஆரம்பமாகியுள்ளது.
27 11 88 ஞாயிறு காலை 7 00 மணிக்கு வகுப்பு நடைபெறும்.
சொற்ப வெற்றிடங்கள் மட்டுமே உள்ளதால் உடன் தொடர்பு கொள்க.

**2. City and Guilds of London Institute**
"Quantity Surveying"
Part I (6 மாதம்) Part II (6 மாதம்)

Lectures by
**C. Durairajah**

(க.பொ. த. பரீட்சையில் ஆங்கிலத்திலும் கணிதத்திலும் திறமைச்சித்தி உடையவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர்)

3- 12 -88 சனிக்கிழமை மாலை 2.00 மணிக்கு ஆரம்பம்

பின்வரும் பயிற்சி நெறிகள் 5. 12 88 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

(3) Motor mechanism (மோட்டார் மெக்கானிசம்) 6மாதம்
(4) Eleccrical Wiring (வீட்டு மின் இணைப்பு) 3 மாதம்
(5) Motor Rewinding (மோட்டார் றீவைண்டிங்) 6 மாதம்
(6) Lache Operation (கடைச்சல் இயந்திர இயக்கம்) 3மாதம்
(7) ARC Welding (மின் ஒட்டுவேலை) 3 மாதம்

மேற்கண்ட பாடநெறிகளுக்கு அதிகளவு செய்முறை அறிமுறை பயிற்சி கொடுக்கப்பட இருப்பதால் மட்டுப்படுத்தப் பட்ட அளவு மாணவரே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

கட்டணங்கள் தவணை அடிப்படையில் செலுத்தலாம். விண்ணப்பப் படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு:
கலவரங்களால் பாதிக்கப்பட்ட அல்லது பயிற்சிக்கான முழுக் கட்டணமும் செலுத்த இயலாதவர்களுக்கு பங்குக் குழுவின் சிபார்சின் பேரில் அவர்களுக்கு அரைக்கட்டண வசதி அளிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு
Registrar
**Patrician Institute of Higher Studies**
59, St. Patrick's Road;
Jaffna.

(C/ 776)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோர்பச்சேவின் அரசியல் சீர்திருத்தம்
# மாநில சுயாட்சியைப் பாதிக்கிறது!

## ஜோர்ஜியா மாநில மக்கள் கண்டனம்

மாஸ்கோ, நவ. 25
சோவியத் யூனியனின் ஜோர்ஜியா மாநிலத்தில் ஜனாதிபதி கோர்பச்சேவின் அரசியல் சீர்திருத்தக் கொள்கைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஜோர்ஜியா நாடாளுமன்றத்துக்கு முன்பாக சுமார் 2 லட்சம் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அதிபர் கோர்பச்சேவின் சீர்திருத்த யோசனைகளை ஜோர்ஜியா நாடாளுமன்றம் விவாதித்துக் கொண்டு இருந்தது.

கோர்பச்சேவின் அரசியல் சீர்திருத்தங்கள் மாநில சுயாட்சியை செல்லாக்காசாக மாற்றுவதுடன், மத்திய அரசின் அதிகாரங்களைக் கூட்டுவதாக அமைந்திருக்கின்றன என்று ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் கண்டித்தனர்.

அதிபர் கோர்பச்சேவின் யோசனைகள் சம்பந்தமாக ஜோர்ஜியா மக்களின் கருத்துக்களை சோவியத் சுப்ரீம் கவுன்சில் முன்வைப்பதாக ஜோர்ஜியா நாடாளுமன்றம் ஏகவாத முடிவில் தீர்மானித்ததாக டாஸ் செய்தி ஸ்தாபனம் பின்னர் அறிவித்தது.

அத்தீர்மானம் பற்றிய விபரங்களை 'டாஸ்' வெளியிடவில்லை. (எ)

### தென் ஆபிரிக்காவில்

## ஷார்ப்வில்லி அறுவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை ரத்தானது!

கேப்டவுண் நவ 25
தென் ஆபிரிக்காவில் 'ஷார்ப்வில்லி ஆறுபேர்'களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை, நீண்டகால சிறைத்தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

தென் ஆபிரிக்க ஜனாதிபதி போத்தா அவர்கள் மீதான மரண தண்டனையை நேற்று ரத்துச் செய்தார்.

அதைத் தொடர்ந்து ஆறுபேரும் 18 முதல் 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கறுப்பு இனத்தவரான துணைமேயர் ஒருவரைக் கொலை செய்வதற்கு சதிபுரிந்ததாக இந்த ஆறு பேர் மீதும் குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது. அறுவரில் ஒருவர் பெண்.

இவர்கள் மீது விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்துச் செய்யும்படி உலக நாடுகள் தென் ஆபிரிக்க அரசுக்கு வேண்டுகோள் விடுத்து வந்தன.

அவர்கள் மீதான வழக்கை புதிதாக விசாரணை செய்ய உயர்நீதிமன்றம் அனுமதி வழங்க மறுத்ததைத் தொடர்ந்து தான் மரண தண்டனையை ரத்துச் செய்யும் உத்தரவை ஜனாதிபதி போத்தா விடுத்தார். (எ)

## அரசியல் சட்டத்தை அவமதிக்கிறார் ஜனாதிபதி
## மக்கள் கட்சித் தலைவி பெனஸிர் கண்டனம்

இஸ்லாமபாத், நவ: 25
பாகிஸ்தானின் புதிய பிரதமர் யார் என்பதை ஜனாதிபதி அறிவிக்காதது அரசியல்சட்டத்தை அவமதிப்பதாக உள்ளது என்று மக்கள் கட்சித் தலைவி பெனஸிர் பூட்டோ குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடந்து ஒரு வாரம் கழிந்துவிட்டது.

நாடாளுமன்றத்தில் உள்ள 204 ஆசனங்களில் மக்கள் கட்சிக்கு 92 ஆசனங்கள் கிடைத்தன.

அறுதிப் பெரும்பான்மைக்கு 12 ஆசனங்கள் அக்கட்சிக்குத் தேவைப்படுகிறது.

முன்னாள் பிரதமர் முகமட்கான் ஜுனஜோ தலைமையிலான இஸ்லாமிய ஜனநாயகக் கட்சிக்கு 54 ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன. எஞ்சிய ஆசனங்களை மற்ற சார்பான கட்சிகள் பங்கிட்டுக் கொண்டன.

இதனால் கூட்டணி அரசு ஒன்றை அமைக்க வேண்டிய நிலைக்கு பாகிஸ்தான் தள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் புதிய அரசை அமைக்க யாரை அழைப்பது என்ற சிக்கல் ஜனாதிபதி குலாம் இஷாக்கானுக்கு ஏற்பட்டுள்ளது

டிசம்பர் 2ஆம் திகதி புதிய நாடாளுமன்றத்தை பதில் ஜனாதிபதி கூட்டியிருக்கிறார்.

அன்று சபாநாயகர் தெரிவு நடைபெறவுள்ளது

எந்த அணியின் சார்பில் நிறுத்தப்படுபவர் சபாநாயகராக வெற்றி பெறுகிறாரோ அந்த அணியின் தலைவரை புதிய அரசாங்கத்தை அமைக்கும்படி ஜனாதிபதி அழைப்பார் என்று இஸ்லாமபாத் அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

இதன் காரணமாக உதிரிக்கட்சிகள் ஆதரவைப் பெற்று தங்கள் நிலையை வலுப்படுத்துவதில் மக்கள் கட்சியும் இஸ்லாமிய ஜனநாயகக் கட்சியும் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. இதேவேளை நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் மக்கள் கட்சித் தலைவி பெனஸிர் பூட்டோ பேசினார்,

புதிய பிரதமர் யார் என்பதை அறிவிப்பதில் பதில் ஜனாதிபதி காட்டிவரும் தாமதத்தை அவர் அப்போது கண்டித்தார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாக உள்ள கட்சியின் தலைவரை அழைத்து புதிய அரசாங்கத்தை அமைக்கும்படி பதில் அதிபர் கேட்காமல் இழுத்தடிப்பது அரசியல் சட்டத்தை அவமதிக்கும் செயலாகும் என்று பெனஸிர் பூட்டோ சொன்னார்.

### மீண்டும் கலவரம்

மாஸ்கோ, நவ 25
சோவியத் யூனியனின் அஸர்பைஜான் மாநிலத்தில் மேலும் கலவரங்கள் இடம் பெற்றன.

### வரவேற்பு

ஐ நா, நவ. 25
மேற்கு ஆசியாவில் உள்ள சகல நாடுகளின் இறைமையை அங்கீகரிக்கும் ஐ நா தீர்மானத்தை பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஏற்றுக்கொண்டதை ஐ நா பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலர் வரவேற்றிருக்கிறார். (எ)

## சோவியத் விஞ்ஞானிக்கு அமெரிக்க சமாதானப் பரிசு

வாஷிங்டன், நவ. 25
நோபல் பரிசுபெற்ற சோவியத் பிரமுகர் அன்ரீ சகாரோவுக்கு அல்பர்ட் ஐன்ஸ்டீன் அமைதிப் பரிசு வழங்கப்பட்டது.

சோவியத் யூனியனில் பலமாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவரை, அமெரிக்கா செல்ல மாஸ்கோ அரசு அண்மையில் அனுமதி அளித்திருந்தது.

50 ஆயிரம் டாலர் கொண்டது இந்த அமைதிப் பரிசு. (எ)

## 'சமுத்திரா'வின் உலகப் பயணம்

இந்தியக்கடற்படைக் கப்பல் 'சமுத்திரா' தனது உலக ஆராய்ச்சிப் பயணத்தை மீண்டும் கடந்த வாரம் ஆரம்பித்தது.

இந்தியக்கடற்படை உப தளபதி எல் ராம்தாஸ் கப்பலை வழியனுப்பி வைத்தார்

28 வெளிநாட்டுத் துறைமுகங்களுக்குச் செல்லும் இக்கப்பலின் பயணம் 28,000 கடல் மைல்களைக் கொண்டதாக அமையும். (எ

## பொய்யாமொழி

**குறள்:**
பழகிய நட்பெவன் செய்யும் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை.

**பொருள்:**
பழகியவர் உரிமை பற்றிச் செய்யும் செயலைத் தாம் செய்தது போலவே கருதி உடன்படாவிட்டால் அவரோடு தாம் பழகிய நட்பு என்ன பயன் தரும்?

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல- 292/2 நாவலர்வீதி யாழ்ப்பாணம்
தொலைபேசி 21805, 23073
26 11-1988
த. பெ. இல 23

## ஜனநாயகத்துக்கு இறுதி அடி!

இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தத்தை அடுத்து தெற்கில் ஆரம்பமான அரச எதிர்ப்பு வன்செயல்கள் படிப்படியாக உக்கிரம் அடைந்துவருகின்றன.

டிசம்பர் 19 ஜனாதிபதித் தேர்தல் நெருங்க நெருங்க தெற்கு எரிமலையாக வெடிக்கும் ஆபத்து உருவாகிவருகிறது.

பாகிஸ்தானிலும் பர்மாவிலும் எதிர் அணிகள் இணைந்து அரசாங்கத்துக்கு எதிராக எத்தகைய ஒரு போராட்டத்தை நடத்தினவோ அதேபோன்ற ஒரு போராட்டம் ஸ்ரீலங்காவின் தென்பகுதியில் நடைபெற்று வருவதை சமீபத்திய சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

வடக்கு — கிழக்கில் ஏற்கனவே தனது கட்டுப்பாடுகளை இழந்த அரசாங்கம் தெற்கிலும் அதேநிலையை எதிர்நோக்கிஉள்ளது. தனது பிடிவாதபோக்கை அரசு தளர்த்தாத பட்சத்தில் தென்பகுதியில் நிலைமை சீராகும் அறிகுறி எதுவும் ஏற்படமாட்டாது என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

ஏற்கனவே தெற்கில் அரச நிர்வாகம் பெரும் அளவு சீர்குலைந்துவிட்டது. பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. பல்கலைக் கழகங்களும் மூடப்பட்டுவிட்டன. அடிக்கடி ஹர்த்தால்களையும் வேலைநிறுத்தங்களையும் அரசாங்கம் எதிர்நோக்கிவருகிறது நாட்டில் உணவுப்பொருள் தட்டுப்பாடு. எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துவருகிறது. மொத்தத்தில் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும் அளவுக்கு சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

வடக்கு - கிழக்கு மக்களை அடக்குவதற்காக அரசாங்கம் கடந்த காலங்களில் எந்தெந்தச் சட்டங்களைக் கொண்டு வந்ததோ அந்தச் சட்டங்கள் யாவும் இன்று தென்பகுதியில் சிங்கள மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகின்றன.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடந்த காலங்களில் மக்கள் எதிர்நோக்கிய விமானத் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்களை விட பெரும்பாலும் ஏனைய அராஜகங்களை தென்பகுதி மக்கள் தற்போது அனுபவித்து வருகிறார்கள்.

வடக்கு – கிழக்கு பெரும்பான்மை தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாது ஸ்ரீலங்கா அரசு தனது கொள்கைகளைப் பிடிவாதமாகத் திணிக்க முயன்றதன் பலனை அது அனுபவிக்க வேண்டியதாயிற்று.

அதே நிலையே இன்று தென்பகுதியிலும் உருவாகி வருகிறது.

அரசாங்கம் தனது பிடிவாதப் போக்கைக் கைவிட்டு படி இறங்கி வருவதற்கு இன்னும் காலம் கடந்து விடவில்லை.

தற்போதைய நெருக்கடிகள் தொடர்ந்து அரசு தெற்கிலும் தனது கட்டுப்பாட்டை இழக்கும் நிலைமை உருவாகுமானால் அது ஸ்ரீலங்காவில் ஜனநாயக பாரம்பரியங்களுக்கு இறுதி அடியாக அமையலாம் என்று அரசியல் அவதானிகள் கருதுவதில் நியாயம் உண்டல்லவா?

## வடமராட்சியில் பனைவள அபிவிருத்தி

வடமராட்சி. நவ 26
வடமராட்சிப் பகுதியில் உள்ள முக்கியமான மூலவளங்களை முழுமையாகப் பயன்படுத்தி வடமராட்சிப் பகுதியில் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

வடமராட்சிப் பகுதியின் முக்கிய மூலவளமான பனைமூலவளத்தை நன்கு பயன்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத் தலைவியும் வடமராட்சி தோட்டக் கல்வி அதிகாரியுமான செல்வி ரீ. பெரியதம்பி தெரிவித்தார். (இ- 70)

### பயிற்சி முடிந்து வெளியேறினர்

மட்டக்களப்பு, நவ 26
கிழக்கு மாகாணத்தில் விஞ்ஞான பட்டதாரிகளாக நியமனம் பெற்ற 50 ஆசிரியர்கள் தமது மூன்று வார கால சேவை முன் பயிற்சியை மட்டக்களப்பில் பெற்று வெளியேறினர்.

மட்டக்களப்பு, அம்பாறை திருகோணமலை மாவட்டப் பாடசாலைகளில் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும்.

மேலதிகமாக ஆரம்பக் கல்வி ஆசிரியர் நியமனம் பெற்ற 49 பேரும் இவர்களுடன் பயிற்சி பெற்றனர். (இ-21

## சுகாதார சேவைகளுக்கு ஒத்துழைப்பு நல்கக் கோரிக்கை

காங்கேசன்துறை நவ 26
"இன்னல்களுக்குள் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு சுகாதார சேவைகளை அளித்து அவர்களது சுகாதார நலன்களைப் பேணுவதற்கு சுகாதாரப் பகுதயினர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இந்நடவடிக்கைகளுக்கு பொதுமக்களும் பொது ஸ்தாபனங்களும் ஒத்துழைப்புநல்கவேண்டும்"

கருகம்பனை அரசினர் வைத்திய நிலைய ஆரம்ப விழாவில் கலந்து மங்கள விளக்கேற்றி உரையாற்றிய யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தலைவரும் சுகாதார வைத்திய அதிகாரியுமான திரு இ. தெய்வேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்

வைத்திய கலாநிதி திரு வ. திருநாவுக்கரசு தலைமையில் திரு சி நிர்மலனின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இவ் வைபவத்தில் வைத்திய கலாநிதி திரு கிருஷ்ணராஜா கலந்துகொண்டு நாடாவைவெட்டி வைத்திய நிலையத்தை திறந்து வைத்தார் வைத்திய அதிகாரி திருமதி சோமசேகரன் மருந்துகளை விநியோகித்தார்.

கருகம்பனை ஆரம்பசுகாதார நிலைய ஆதரவில் இடம் பெற்ற இவ்வைபவத்தில் திரு. க பாலகிருஷ்ணன், வைத்திய கலாநிதி திரு. கிருஷ்ணராஜா, திரு. செ. பத்திநாதர் உட்பட பலர் உரையாற்றினர்.

ஆரம்பசுகாதாரநிலைய செயலாளர். திரு அ சுகிர்காமத்சம்பி நன்றி தெரிவித்தார். (இ-68)

## வைத்திய அதிகாரியை நியமிக்குக

பளை அரசினர் வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்குக.

இந்திராபுரம் கிராம அபிவிருத்திச்சங்கத்தினர் இதுதொடர்பான மகஜர் ஒன்றைய யாழ்-கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ளனர். (இ-ரி)

## புதிய சனசமூக நிலையம்

பச்சிலைப் பள்ளி நவ 26
இத்தாவில சதாபுரம் குடியேற்றத் திட்டத்தில் அப்பகுதி மக்களால் கட்டப்பட்ட உதய தாரகை சனசமூக நிலயத்தை பளை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு த. பீ கோபக் அண்மையில் திறந்து வைத்தார். (இ-ரி)

## ஜே.வி.பி. வளர்ந்தது எப்படி?
## ரோஹண விஜேவீர விளக்கம்

கொழும்பு, நவ 26
கொழும்பில் லங்காதீப பத்திரிகை மூலம் சிங்கள வாசகர்கள் கேட்ட கேள்விகளுக்கு மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் ரோஹண விஜேவீர பதிலளித்திருக்கிறார்

அவற்றில் ஒரு கேள்வியையும் அதற்கான பதிலையும் 'சண்டே டைம்ஸ்' பத்திரிகை பிரசுரித்திருக்கிறது.

கேள்வி: மக்கள் விடுதலை முன்னணி எமக்கு பெரிய பிரச்சினையாக இருக்கிறது.

பலர் கைது செய்யப்பட்டனர் என்று சொல்லப்பட்டாலும் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் வேலைகளை எவரும் பகிரங்கமாகச் செய்யவில்லை.

அப்படி என்றால் உங்கள் இயக்கம் இவ்வளவு பெரிய சக்தியாக வளர்ந்தது எப்படி?

ரோஹண விஜேவீர:- ஜே வி பி உறுப்பினர்கள் மக்கள் மத்தியில் அரசியல் ரீதியில் இயங்கி வருகிறார்கள்; கட்சிப்பிரசுரங்களை மக்களிடையே விநியோகித்து வருகிறார்கள் கூட்டங்களை நடத்துகிறார்கள்; எதிர்க்கட்சிகளுடன் பேசிவருகிறார்கள்; 'செஞ்சக்தி' பத்திரிகையை விநியோகித்து வருகிறார்கள்.

இவை எல்லாம் பகிரங்கமாகவே இடம் பெறுகின்றன.

மக்களின் ஆதரவுடன் மக்களுடன் இணைந்தே எம் உறுப்பினர்கள் செயற்படுகின்றார்கள். நீங்கள் இன்னும் மக்களுடன் ஐக்கியப்படவில்லை. அதனால் உங்களுக்கு அவை தெரியவில்லை

ஆகவே இன்றே மக்கள் இயக்கத்தில் சேருங்கள். உங்கள் பிரச்சினைகள் தீர்ந்து விடும்; அப்போது பகிரங்கமாகப் பணியாற்றும் எம்மவரை நீங்கள் சந்திக்கலாம்.

ஜே வி. பி மாபெரும் சக்தியாக எப்படி வளர்ந்தது என்பது அப்போது உங்களுக்குத் தெரியவரும்.

இவ்வளவு காலமும் நீங்கள் அரசியலில் பிழையான இடத்தில் இருந்தது பற்றி கவலைப்படத் தேவையில்லை.

அந்த இடத்தில் இருந்து வெளியேறி தேசபக்த இயக்கத்தில் சேருங்கள். (உ எ)

### குண்டு வெடிப்புச் சம்பவத்தில்

## காயம் அடைந்த மாணவன்
## இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார்

யாழ்ப்பாணம் நவ 26
கடந்த 9ஆம் திகதி யாழ். செயலகத்துக்குச் சமீபமாக இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்பின் போது கண்பார்வை பாதிக்கப்பட்ட மாணவன் ஒருவர் சிகிச்சைக்காக இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

நடேசபிள்ளை சுபநேசன் (வயது 18) என்பவரே இந்த மாணவன் ஆவார் இவர் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்தவர்

இவர் சம்பவதினம் கல்லூரிக்கு சென்று கொண்டிருந்த சமயம் குண்டு வெடிப்பினால் இவரது இடதுகண்ணில் காயம் ஏற்பட்டது

இவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

காயத்தினால் வெளிவந்த இரத்தம் கண்ணில் உறைந்ததால் இவரது இடது கண் பார்வை இழக்கும் ஆபத்து உருவாகி இருந்தது.

கண்ணில் உறைந்துள்ள இரத்தக்கறையை அகற்றுவதன் மூலம் கண்பார்வையை மீளப் பெறமுடியும் என்றும் ஆனால் இந்த இரத்தக் கறையை அகற்றக் கூடிய நுண்ணிய சத்திர சிகிச்சையை செய்வதற்குரிய வசதிகள் யாழ்ப்பாணத்தில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்தே இந்த மாணவன் யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்து அம்புலன்ஸ் மூலம் கோட்டை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டு 'ஹெலிகொப்டர் மூலம் பலாலி முகாமுக்கு அனுப்பப்பட்டார்.

மாணவனுக்குத் துணையாக அவரது தந்தையும் பயணம் செய்தார்.

பலாலி முகாமில் இருந்து இந்திய விமானம் மூலம் 'தாம்பரம்' செல்லும் இந்த மாணவனுக்கான சிகிச்சை வசதிகள் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினரால் வழங்கப்படும்.

இந்த மாணவன் இந்தியா செல்வதற்கான ஏற்பாடுகளை அமைதிப் படையின் யாழ் நகர கொமாண்டர் பிரிகேடியர் காலோன் மேற்கொண்டிருந்தார். (இ - 5)

## நல்ல இனப் புல் விநியோகிக்கத் திட்டம்

மானிப்பாய், நவ 26
கால்நடை வளர்ப்போரின் நன்மை கருதி சுன்னாகம் கால்நடை வளர்ப்போர் சங்கக் கிளையினர் கினி 'பி' நேப்பியர் இனப் புல் துண்டங்களை இலவசமாக கால்நடை வளர்ப்போருக்கு வழங்க முன்வந்துள்ளனர்.

இது சம்பந்தமாக கால்நடை வளர்ப்போர் சங்க சுன்னாகம் கிளைத் தலைவர் திரு பா. சுதர்சன் நமது செய்தியாளரிடம் பினவருமாறு கூறினார்.

மாடு வளர்ப்பவர்கள் தினமும் பசுக்களுக்கு 56 கிலோ பச்சைத் தீவனத்தை கொடுப்பது அவசியம் இவ்வாறு பச்சைத்தீவனம் கொடுப்பதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்க செய்வதோடு நல்ல திடகாத்திரமான கன்றுகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே மாடுகள் வளர்ப்போர் தத்தம் வீட்டின் வளவில் ஒரு சிறு பகுதியிலாவது நல்ல இன புல்லை வளர்ப்பது அவசியம். மாடு வளர்ப்போரின் நன்மை கருதி நல்ல இன புல் துண்டங்களை இலவசமாக வழங்குவதற்கு எமது சங்கம் முடிவு செய்துள்ளது.

இவ்வாறு திரு. சுதர்சன் தெரிவித்தார் (இ-90)

## ஏட்டுச் சுவடிகளை கைநூலாக மாற்ற முயற்சி

அம்பாறை நவ 26
கிழக்கிலங்கையில் வழக்கிலுள்ள ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்து அவற்றைப் புத்தகங்களாக வெளியிடும் முயற்சி ஒன்று தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

காரைதீவு பட்டதாரிகள் சங்கம் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்து வாசித்து அவற்றைக் கையெழுத்துப் பிரதிகளாக மாற்றும் நடவடிக்கைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. (இ - 14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மில்க்வைற் செய்தி இதழ் 155'
மில்க்வைற் நீல சோப்
மேலுறைகள் 10 அனுப்பி
புதிய வெளியீடான
மில்க்வைற் செய்தி இதழ் 155ஐப்
பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.



# உதயன்

26 - 11 - 1988 சனிக்கிழமை



நீம் சுகாதார தூபம்
உங்கள் பொன்னுன மேனியில்
நுளம்பு குத்துகிறதா?
இன்றே வாங்கிப் புகையுங்கள்
"நீம் சுகாதார தூபத்தை"
இது வேப்பம் விதையில் இருந்து
தயாரிக்கப்பட்டது.
சிறிய பைக்கற் விலை
ரூபா ஒன்று மட்டுமே!
- ஓர் மில்க்வைற் தயாரிப்பு


## மலையக சிங்களவருக்குப் பயமுறுத்தல் பிரசுரம்

கொழும்பு, நவ.26
மலைநாட்டில் வாழும் சிங்கள மக்களைப் பயமுறுத்தும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன என்று அரசு அறிவித்திருக்கிறது.

மலைநாட்டில் இனரீதியான வன்செயல்களுக்குத் தூபமிடும் வகையில் இத்துண்டுப் பிரசுரங்கள் இருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

"தமிழர் அமைப்புகள் எதுவும் இத்துண்டுப்பிரசுர விநியோகத்தில் ஈடுபடவில்லை. தென் இலங்கைத் தீவிரவாதிகள் தான் இதற்குக் காரணம்" - இப்படி அரசு அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## இந்தியப் பிரசைகள் மூவர் தெற்கில் கொலை!

கொழும்பு நவ. 26
தென்இலங்கையில் இயம்பலாந்தோட்டையில் உள்ள இந்தியர்கள் நடத்தும் கரும்புக் தொழிற்சாலைக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள், அங்கு இருந்த மூன்று இந்தியப் பிரசைகளைக் கொலைசெய்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் கடந்த புதன் இரவு இடம் பெற்றதாக கொழும்பில் அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தென் இலங்கையில் இடம் பெற்று வரும் வன் செயல்களில் இந்தியப் பிரசைகள் கொல்லப்பட்டது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்பட்டது

25 பேர் அடங்கிய கோஷ்டி ஒன்று தொழிற்சாலைக்குள் புகுந்து கொள்ளையிட்ட பின்னரே இந்தியப் பிரசைகளைக் கொலை செய்ததாகக்கூறப்பட்டது.

உயிரிழந்தவர்களில் ஒருவர் பெண். [உ-எ]

## முஸ்லிம் காங்கிரஸுக்கு பிரேமா அழைப்பு

கொழும்பு, நவ 26
பேச்சுக்கள் நடத்த வரும்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனுப் எம்.எச்.எம்.அஷ்ரப்பைபிரதமர் பிரேமதாஸ அழைத்திருக்கிறார்.

அழைப்பைத் தான் ஏற்றிருப்பதாக ஜனுப் அஷ்ரப் தெரிவித்தார்.

இதனிடையில் கிழக்கு மாகாணசபைத்தேர்தல் முடிவுகள் பற்றி ஜனுப் அஷ்ரப் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

முஸ்லிம் மாகாண சபை ஒன்றை அமைக்க கிழக்கு மாகாணமுஸ்லிம்கள் முஸ்லிம்காங்கிரஸுக்கு ஆணை வழங்கி விட்டனர்.

தனி மாகாணசபையே பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு பாதுகாப்பையும் சமாதானத்தையும் வழங்கக் கூடியது என்பதையும் கிழக்கு மாகாண சபைதேர்தல் எடுத்துக் காட்டி விட்டது.

இலங்கை முஸ்லிம்களின் ஏகப்பிரதிநிதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பதையும் தேர்தல் நிரூபித்திருக்கிறது.

இப்படி ஜனுப் அஷ்ரப் தெரிவித்தார். (உ-எ)

### வரவேண்டாம் எனக் கோரிக்கை

கொழும்பு, நவ, 26
வனவிலங்குச் சரணாலயங்களுக்கு விஜயம் செய்ய வேண்டாம் என்று வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்கள இயக்குனர் மனோ மடவல மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

யால, ஹோர்ட்டன் பிளெய்ன்ஸ், வஸ்கமுவ, கல்லோயா ஆகிய தேசிய சரணாலயங்களின் அண்மைக் காலமாக இடம் பெற்று வரும் வன்செயல்களைத் தொடர்ந்து, திரு மடவல இவ் வேண்டுகோளை விடுத்தார். (உ-எ)

### மின் விநி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
என்றும்—

மின் கோபுரத்தைத் திருத்தி, மின்சார விநியோகத்தைச் சீர் செய்ய ஆகக் குறைந்தது இரு வாரங்களாவது செல்லும் என்றும் மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேசமயம் மின் கோபுரம் சேதமுற்ற பகுதிக்குச்சென்று சேதங்களைமதிப்பிட்டு, திருத்த வேலைகளை ஆரம்பிப்பதற்கு மின்சார சபை ஊழியர்கள் அச்சம் தெரிவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அநுராதபுரத்திற்கு மின் கோபுரங்கள் வழியான மின்விநியோகம் துண்டிக்கப்பட்ட போதிலும், நிலத்திற்குக் கீழான இணைப்புகள் மூலம் அநுராதபுரத்தின் ஒரு பகுதிக்கும் வவுனியாவின் ஒருபகுதிக்கும் தற்போது மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. (உ-5)

### அரிசி விலை உயர்வு

யாழ்ப்பாணம், நவ 26
யாழ். குடா நாட்டில் அரிசியின் விலை திடீர் என அதிகரித்துள்ளது

போக்குவரத்து சீரின்மையே விலை அதிகரிப்புக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. (ஒ)

### பகல்நேர....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
யில் காலை 5.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேசமயம் கடந்த புதனன்று இரவு யாழ்ப்பாணம் 6 ஆம், குறுக்குத் தெருவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் குருநகர்ப்பகுதியில் இருந்து கடலில் மீன்பிடிக்கச் செல்வதற்கு அனுமதி மறுக்கப் பட்டுள்ளதாக அறியப்படுகிறது. (உ-ச-160-51)

# 45 டிரான்ஸ்போமர்கள் வன்செயல்களினால் சேதம்

## நாட்டின் பல பகுதிகள் இருளில்

கொழும்பு, நவ. 26
நாடு முழுவதும் பல பிரதேசங்களில் 45 டிரான்ஸ்போமர்கள் சேதமாக்கப்பட்டுள்ளன என்றும் அதனால் மின் விநியோகம் பரவலாகத் தடைப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சில பகுதிகளில் உயர் அழுத்த மின்சாரக்கம்பிகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

தெஹிவளை, இரத்மலானை, பிலியந்தலை, மொரட்டுவை, அத்துறுகிரிய, பாணந்துறை, மத்துகம, களுத்துறை, அளுத்கம, பொலன்னறுவ, ஹிங்குராக்கொட, அம்பாந்தோட்டை, மாத்தறை, அங்குண கொலபெலஸ ஆகிய பகுதிகளே பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன.

ஆயுத பாதுகாப்புடன் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மின்சக்தி அமைச்சர் பி. தயாரத்தின தெரிவித்தார். (உ-எ)

### இடமாற்றங்கள் இடைநிறுத்தம்

அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் டாக்டர்கள், நர்சுகளின் வருடாந்த இடமாற்றங்கள்சுகாதார அமைச்சும் போதனு ஆஸ்பத்திரிகள் அமைச்சும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தி வைத்து உள்ளது.

வைத்திய அதிகாரிகள் சங்கங்களின் ஆலோசனையுடன் இம் முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது (உ-எ)

## தென்பகுதியில்...!

யாழ்ப்பாணம் நவ, 26
★ மெனிக்ஹின்ன என்ற பொலீஸ் பகுதியில் கடந்தசனிக்கிழமை சேவையில்ஈடுபட்டிருந்த போக்குவரத்து வாகனங்கள் மீது இனந்தெரியாத கோஷ்டியென்று கல்லெறிந்து சேதப்படுத்தியது

இச்சம்பவத்தில் இ.போ.ச பஸ் சாரதி ஒருவரும் சாயங்களுக்கு இலக்காகி கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

★ தெஹிவளை, மஹரகம, பாணந்துறை, பொலன்னறுவை ஆகிய பகுதிகளிலுள்ள மின்சார டிரான்ஸ் போமர் சேதப்படுத்தப்பட்டதால் அந்தப் பகுதிகளுக்கான மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கிறது.

இதேவேளையில் மாத்தறை மாவட்டத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருப்பதால் அங்கு மக்கள் மெழுகு திரியைப் பாவிக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்தப் பகுதியில் பொருள் விநியோகமும் பாதிக்கப்பட்டிருக்கிறது

★ கடந்த ஞாயிற்றுக்கிழமை மாத்தறை நகரில் இனந் தெரியாத சிலர் நான்கு குண்டுகளை வெடிக்க வைத்தனர். இந்தச் சம்பவத்தின் போது எதுவித சேதமும் ஏற்படவில்லை

★ நாவலப்பிட்டி இ.போ.ச பஸ் டிப்போவுக்குள்ளிருந்த பஸ்களை அடித்து உடைத்து நாசப்படுத்தியதுடன், அங்கிருந்த மூன்று பஸ்களை தீவைத்துக கொளுத்தியும் இருக்கிறது இனந் தெரியாத கோஷ்டி ஒன்று

★ மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டிருப்பதன் காரணமாக திஸ்ஸமஹாராம, தங்காலை, பெலியத்த, வலஸ்முல்ல, அம்பாந்தோட்டை, குருநாகல், அனுராதபுரம், ஆகிய அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சத்திர சிகிச்சைகள் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன

இதனை நிவர்த்தி செய்வதற்கு சுகாதார அமைச்சு முதற் கட்டமாக ஐந்து ஆஸ்பத்திரிகளுக்கு மின்சார ஜெனரேட்டர்களை அனுப்பி வைத்திருக்கிறது

★ போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டிருப்பதன் காரணமாக லொறிகள், வான்கள், ஆகியவற்றில் ஆட்களை ஏற்றிச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை அரசாங்கம் தளர்த்தியிருக்கிறது.

★ கடந்தஜூலைமாதம் 21ஆம் திகதியிலிருந்து அக்டோபர்மாதம்இறுதி வரையில் முன்னூறு அரசியல் படுகொலைகள் இடம் பெற்றுள்ளன.

தென்மாகாண முதலமைச்சர் திரு எம். எஸ். சமரசிறி அண்மையில் காலி கச்சேரியில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் இத்தகவலை வெளியிட்டார்.

★ பந்தேகம பகுதியிலுள்ள சில தேயிலைத் தோட்டங்களை இராணுவத்தினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

தீவிரவாதக் கோஷ்டியினருக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் அப்போது துப்பாக்கிச் சமர் இடம் பெற்றது

★ எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மாத்தறை, ஹக்மனை, அம்பாந்தோட்டை, தங்காலை, கதிர்காமம் ஆகிய டிப்போக்களைச் சேர்ந்த பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முடியாமல் இருக்கிறது

★ அரசாங்க உத்தியோகத்தர்களும் மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களும் சீரற்றபோக்குவரத்துச் சேவை காரணமாக கடமைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

கச்சேரிகள் திறந்திருந்தபோதிலும்ஊழியர்கள் செல்ல முடியத நிலை ஏற்பட்டிருப்பதால் நிர்வாகம் சீர்குலைந்திருக்கிறது.

★ அண்மையில் களனிப் பாலத்தருகே கண்ணி வெடிஒன்று வெடித்ததன் காரணமாக ரயில்பாதை முற்றுகச் சேதம் அடைந்தது.

இதேவேளை கடந்த வாரம் ஒரு நள்ளிரவு வேளையில் இரு பெரிய வெடிச்சத்தங்கள் கொழும்பு நகர மக்களை ஆழ்ந்த உறக்கத்திலிருந்து எழுப்பியது.

★ மாத்தறை, தங்காலை, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளிலுள்ள சகல ரியூட்டரிகளையும் மூடிவிடுமாறு பாதுகாப்பு படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும்வரை ரியூட்டறிகள் அனைத்தும்மூடப்பட்டிருக்கவேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. (இ- ஐ)

### 500 தபால்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ளது.

இதேசமயம் வெளியூர்த் தபால்களும் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரவில்லை இதன் காரணமாக உள்ளூர் தபால்சேவைகள்மட்டும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வருகின்றன.

தபால் சேவை சீர்குலைந்துள்ளதால்முத்திரைத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. (உ-10)

## தெற்கில் 9 பேர்கொலை

கொழும்பு, நவ 26
கடந்த 24 மணித்தியாலங்களில் தென் இலங்கையில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

இரண்டு கிராமங்களில் ஜே வி. பியைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுவோர் நடத்திய தாக்குதலின் போது இவர்கள் உயிரிழந்தனர். (ஒ எ)

## தொழில் நுட்ப கல்லூரிகள் மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், நவ 26
யாழ்ப்பாணம் உட்பட அனைத்து தொழில் நுட்பக் கல்லூரிகளும் எதிர்வரும் ஜனவரி இரண்டாம் திகதி வரை மூடப்பட்டிருக்கும்.

தென்பகுதியில் நடைபெற்றுவரும் அசம்பவிதங்கள் காரணமாக தென்பகுதித் தொழில் நுட்பக் கல்லூரிகள் இயங்க முடியாத நிலையில் உள்ளதாலேயே சகல தொழில் நுட்பக் கல்லூரிகளும் மூடப்பட்டதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது (ஒ-10)

## சு. க. தலைமையில் ஐந்து கட்சிக் கூட்டணி

கொழும்பு, நவ 26
சுதந்திரக்கட்சிதலைமையில் ஐந்து அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து கூட்டணி ஒன்றை அமைத்துள்ளன.

நேற்று முன்தினம் நண்பகல் இது சம்பந்தமான உடன்படிக்கையில் ஐந்து கட்சிகளின் தலைவர்களும் கைச்சாத்திட்டனர்.

கூட்டணிக்கு ஜனநாயக மக்கள் சக்தி என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இந்தகூட்டணியில் சேரும் என்று முன்னர் கூறப்பட்டது. ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் எவரும் நேற்று நடந்த நிகழ்ச்சிக்குச் சமுகமளிக்கவில்லை.

சுதந்திரக்கட்சி தமிழ்க் காங்கிரஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், மக்கள் ஐக்கிய முன்னணி, லிபரல் கட்சி, ஆகியவையே இந்த ஐந்து கட்சிகளுமாகும். (உ-எ)

## ஆரம்ப ஆசிரியர்களின் சேவைக்கால முன் பயிற்சி 30 ஆம் திகதி முடிவடையும்

யாழ்ப்பாணம், நவ 26
தற்பொழுது நடைபெற்று வரும் ஆரம்ப ஆசிரியர்களின் மூன்றுவது குழுவுக்கான சேவைக்கால முன் பயிற்சி எதிர்வரும் 30 ஆம் திகதி நிறைவடைய உள்ளது

அன்றைய தினம் பிற்பகல் 2 மணியளவில் இந்த பயிற்சியில் பங்கு கொண்ட அனைவருக்கும் சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெற உள்ளது

கடந்த 10 ஆம் திகதி யாழ் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் இந்தப் பயிற்சி நெறி ஆரம்பமானது இதில் 24பேர் சேர்த்துக் கொள்ளப்பட இருந்தனர். ஆனால் தகவல் தொடர்புச் சாதனங்கள் ஸ்தம்பித்திருந்த காரணத்தினால் உரியவர்களுக்கு உரிய முறையில் தகவல் அறிவிக்க முடியாதிருந்தது.

இதனால் 96 பேர் மட்டுமே இந்தப் பயிற்சி நெறியில் கலந்துகொண்டனர்.

ஏனையவர்களுக்கான பயிற்சி மேலும் ஒரு தவணையில் வழங்கப்படும்

இவ்வாறு யாழ். கல்வித்திணைக்கள பதில் கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் தெரிவித்தார். (ஒ 9)

## நடமாடும் ஜனுதிபதியாக நடப்பாராம் பிரேமா!

என்னைத் தெரிவு செய்தால் நான் 'நடமாடும் ஜனுதிபதி' யாக விளங்குவேன்; மாளிகைக்குள் இருக்கும் ஜனுதிபதியாக இருக்கமாட்டேன்.

பிரதமர் பிரேமதாஸ மாத்தறை, உயன்வத்தையில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் முன் கண்டவாறு சொன்னர்.

அவர் மேலும் சொன்னதாவது;

ஜனுதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் நிர்வாகத்தை முற்றாக மாற்றி அமைப்பேன்.

நிறைவேற்று ஜனுதிபதிக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையிலான உறவு முறையில் மாற்றங்களைக் கொண்டு வருவேன்.

உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடுவேன்.

ஜனுதிபதித் தேர்தலுடன் பொதுத்தேர்தலையும் நடத்தும்படி சிலர் கோருகிறார்கள். அப்படிச் செய்தால் மக்கள் குழப்ப நிலையை அடைவர் — என்றார். (உ-எ)

### ஆசிரியர் பற்றக்குறை நீங்குகிறது

நெடுந்தீவில் இருந்து ஆரம்ப ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்ட அனைவருக்குமே நெடுந்தீவுப் பாடசாலைகளிலேயே நியமனம் கிடைத்துள்ளது.

சுமார் 27 பேர் வரை இங்கு ஆரம்ப ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளனர். இதனால் நெடுந்தீவில் ஆசிரியர் பற்றக்குறை கணிசமான அளவு நீங்கிவிட்டதாகச் சொல்லப்படுகின்றது.


WHEN YOU WANT TO OPEN THE RIGHT DOORS
IN SRILANKA
REMEMBER
SHABRA

We have proved Stability
We have shown Honesty
We are very much Advanced
We have the most Backing
We are so Reliable
Thats why we are on the move Ahead

for more details please contact:
Shabra Unico Finance Limited
207 Power House Road,
JAFFNA.



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 26-11-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications(pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Saturday 26th November 1988



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org